செ.வெ.எண்: 372/2017 2.08.2017

# செய்திக் குறிப்பு

## காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின்செய்திக்குறிப்பு

### பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கு கல்வித்தகுதி இணையதளத்தில் பதிவு செய்தல்

மாணவர்கள் தங்களது வேலைவாய்ப்பு பதிவினை வேலைவாய்ப்புத் துறையின் https://tnvelaivaaippu.gov.in என்ற இணையதளம் வாயிலாக பதிவு செய்து கொள்ளலாம். இவ்விணையதளத்தின் மூலம் பதிவு செய்தல், புதுப்பித்தல், கூடுதல் கல்வி பதிவு செய்தல் மற்றும் வேலைவாய்ப்பு அடையாள அட்டை பிரதி எடுத்தல் ஆகியவற்றையும் மேற்கொள்ளலாம். மேலும், பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று வேலைவாய்ப்பு பதிவு செய்ய விரும்பும் மாணவ, மாணவியர்கள் மதிப்பெண் சான்று வழங்கப்படும் பள்ளிகளிலேயே வேலைவாய்ப்பு பதிவு செய்து கொள்ளலாம். எனவே, புதிதாக பதிவு செய்ய விரும்புவோர் குடும்ப அட்டை/ஆதார் அட்டை/பான் அட்டை(Pan Card)/மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டை/கடவுச்சீட்டு (Passport) ஆகியவற்றில் ஏதேனும் ஒரு ஆவணத்தை மதிப்பெண் சான்று பெறும்போது எடுத்து வர வேண்டும். பள்ளிகளில் வேலைவாய்ப்பு பதிவுப்பணி நடைபெறும் 15 நாட்களுக்கும் (26/07/2017 முதல் 09/08/2017 முடிய) மதிப்பெண் சான்று வழங்கப்படும் நாளான 26.07.2017 அன்றைய தேதியாக பதிவு மூப்பு தேதியாக வழங்கப்படும். மேலும், சி.பி.எஸ்.இ மற்றும் மெட்ரிக்குலேசன் வழி பயின்ற மாணவர்களும் தங்களது கல்வித் தகுதியை வேலைவாய்ப்புத் துறையின் https://tnvelaivaaippu.gov.in என்ற இணையதளம் வாயிலாக பதிவு செய்து கொள்ளலாம்

ஒம்/. . . .
மாவட்ட ஆட்சியர் அவர்கள்,,
காஞ்சிபுரம்.

வெளியீடு–
செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.